# HIVயும் சிற்றின்ப போதை மருந்துகளும்
# (RECREATIONAL DRUGS AND HIV)

Fact Sheet Number 203
அத்தியாயம் 203

சிற்றின்ப போதை மருந்துகள் ஒருவருக்கு HIV தொற்று ஏற்பட வழிவகுக்கும். மேலும் HIVயை கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ளப்படும் ஏஆர்வி மருந்துகளின்போது போதைப் பொருள்களை எடுத்துக்கொண்டால் அது பல்வேறு மோசமான இடையூறுகளை ஏற்படுத்தும். இது ஏஆர்வி மருந்து அல்லது போதை மருந்துகளின் அளவுகளை குறைக்கவோ அல்லது அதிகப்படுத்தவோ செய்யும். இவை உயிரிழப்பைக் கூட ஏற்படுத்தலாம்.

**HIV தொற்று ஏற்படுதலும் போதை மருந்துகளும்:**

ஆல்கஹால் அல்லது போதை மருந்துகளை உடலுறவு கொள்வதற்கு முன்போ அல்லது அப்போதோ பயன்படுத்தினால் உங்களால் பாதுகாப்பான உடலுறவு முறைகளை கடைபிடிக்க முடியாது. (அத்தியாயம் 151ஐப் பார்க்கவும்). கேளிக்கை பொழுதுகளின் போது அதிக அளவில் இன்பம் தேவைப்படும் அதிலும் குறிப்பாக பாலுறவு கொள்ள அதிகளவில் அது தூண்டும் அவ்வாறு நீங்கள் பாலுறவுகளில் ஈடுபட நிகழும்போது பாதுகாப்பான பாலுறவு முறைகள் HIV தொற்று ஏற்படுவதையும், பால்வினை நோய் தொற்று ஏற்படும் ஆபத்தை குறைக்கும் என்பதை நினைக்க மாட்டீர்கள். போதை மருந்துகளை உடலுறவிற்காக பயன்படுத்தினால் அது ஆபத்தை அதிகரிக்கும்.

போதைப்பொருள்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் இன்பத்தை அனுபவிக்க நேர்ந்தால் அதிக அளவு HIV தொற்று தீவிரம் அடைய வாய்ப்பு இருக்கும். சில அறிகுறிகள் மற்றும் அடையாளங்களும் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படும். கண்டிப்பாக உங்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளுக்கு என்ன காரணம் என்பதை உங்கள் மருத்துவர் அறிந்திருக்க வேண்டும்.

**HIV நோய்களும் போதைப்பொருள் பயன்படுத்துதலும்:**

போதைப்பொருள் பயன்படுத்துதல் மற்றும் HIV நோயின் வளர்ச்சி பற்றி சிறிய அளவில் ஆராய்ச்சிகள் நடைபெறுகிறது. எப்படி இருந்தும் அதிக அளவில் கேளிக்கை விருந்துகளில் இருந்தால் உங்களுடைய ஆரோக்கியத்தை பேணிகாக்க முடியாது. தகுந்த அளவு உறக்கமும் தொடர்ச்சியான நல்ல உணவும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். போதைப்பொருள் பயன்படுத்துவதால் தூங்கச் செல்லமுடியாது அதோடு பசியை தூண்டுவதையும் கெடுக்கும். இதைச் செய்தால் உங்களுடைய நோய் எதிர்ப்பு மண்டலம் பலவீனமடையும் இது சுலபமாக ஏஆர்வி யினால் பக்க விளைவுகள் அதிகம் ஏற்பட வழிவகுக்கும் அல்லது பலவீனமான நோய் எதிர்ப்பு மண்டலத்தால் அதிகளவில் தொற்று (சந்தர்ப்பவாத நோய்கள் பற்றி அத்தியாயம் 500ல் பார்க்கலாம்) ஏற்படும்.

HIV யினால் பாதித்த நபர் அதிக அளவில் போதைப் பொருள் பயன்படுத்தி வந்தால் அவர்கள் எடுத்துக்கொள்ளும் ஏஆர்வி மருந்தை தவறவிடும் ஆபத்து அதிகம். இது HIV எதிர்திறன் ஏற்பட வழிவகுக்கும் (அத்தியாயம் 126ஐப் பார்க்கவும்). HIV மாற்றமடைந்து (வளர்ச்சியடைதல்) அதனால் ஏஆர்வி மாத்திரை வேலை செய்வதை நிறுத்திவிடும்.

**போதைப்பொருள் குறுக்கீடு:**

HIV யினால் பாதிகப்ப்ட்டுள்ள நபர் போதைப் பொருள்களை பயன்படுத்தும்போது அது அவர் எடுத்துக்கொள்ளும் ஏஆர்வி மருந்துகளுடன் குறுக்கீடுகளை ஏற்படுத்தும் ஆபத்து அதிகம். இந்த குறுக்கீடுகள் ஏஆர்வி மருந்துகள் அல்லது போதைப் பொருள்களின் வீரியத்தை குறைத்துவிடும். சில நபர்களுக்கு ஏஆர்வி மாத்திரை வேலை செய்வதை நிறுத்திவிடும் ஏனெனில் உங்களது உடலில் அவை போதுமானதாக இருக்காது. மேலும் இந்த போதைப் பொருள் குறுக்கீடுகளால் தீவிர மற்றும் அதிகமான அளவில் உயிரிழப்புகள் ஏற்பட காரணமாகும்.

போதைபொருள் மற்றும் ஏஆர்வி மருந்துகள் இடையே ஏற்படும் குறுக்கீடுகளைப் பற்றி பாதுக்காப்புள்ள ஆராய்ச்சிகள் செயலில் இல்லை. போதைப்பொருள் பயன்படுத்துதல் சட்டத்துக்கு புறம்பானது. மருந்து கம்பெனிகள் இதன் விளைவுகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்தால் கூட போதைப்பொருள்களை HIV பாதித்த நபருக்கு கொடுப்பதில்லை. இது போதைப்பொருள் மற்றும் ஏஆர்வி இடையே ஏற்படும் குறுக்கீடுகளைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் ஆய்வகங்களிலேயே இருக்கிறது என்று தெரிவிக்கிறது அல்லது நாம் ஏற்கனவே அறிந்தது போல இந்த போதைப் பொருள்கள்

எவ்வாறு நோய் எதிர்ப்பு மண்டலத்தை பாதிக்கிறது என்பதை பற்றி அறிவது ஆகும்.
பெரும்பாலான ஏஆர்வி மருந்துகள் கல்லீரலால் செயல்புரிகிறது. எல்லா புரோட்டியஸ் இன்கிபிட்டார்ஸ்களும் இவ்வழியே பயன்படுத்தப்படுகிறது. இந்த போதைப் பொருள்களின் அளவு கல்லீரல் சுரப்பிகளில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

**ஆல்கஹால் :**

அபகவிர் மற்றும் ஆம்ப்ரனவீர் எடுத்துக்கொள்ளும் நபர்கள் ஆல்கஹால் அருந்தும்போது இம்மருந்துகளின் அளவுகள் இரத்தத்தில் அதிகரிக்கும், தொடர்ச்சியாக ஆல்கஹால் அருந்துவது பல ஏஆர்வி மருந்துகளின் அளவுகளை குறைக்கும். டிடோனசின்(ddi) பயன்படுத்துவதால் பான்கிரிட்டிஸ் ஏற்படும் ஆபத்து அதிகரிக்கலாம்.

**வலிகொல்லி:**

வலிகொல்லி மற்றும் ஏஆர்வி மருந்துகளுக்கு இடையேயான குறுக்கீடுக்கள் இன்னும் படிப்பினையிலேயே இருக்கிறது இது நேரிட முடியாத வலிகொல்லியின் தீவிரத்தை அதிகரிக்கும்.

கிரிஸ்டல் மெத், மீதம்பீட்டமைன்: (மேலும் கிரங்க், கிளாஸ், டினா மற்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது). தற்போதைய ஆராய்ச்சிகளில் ஆண்களுடன் உறவு வைத்துக்கொள்ளும் நபர்கள் பயன்படுத்தும் கிரிஸ்டல் மெத் பயன்படுத்தாத நபர்களைவிட HIV தொற்று ஏற்படுத்தும் ஆபத்து 5 மடங்கு அதிகமாகும். இந்த மருந்து புரோட்டியஸ் இன்கிபிட்டார்ஸ் போன்றே கல்லீரல் வழியே செயல்புரிகிறது. ஆபத்தான குறுக்கீடுகள் அதிகமாக ஏற்படும். ரிட்டோனவீர் பயன்படுத்துவது ஆம்பீட்டமைன் அளவை 2-3 மடங்கு அதிகப்படுத்தும்.

**எக்ஸ்டஸி/MDMA:**

எக்ஸ்டஸி, புரோட்டியஸ் இன்கிபிட்டார்ஸ் போன்றே கல்லீரல் வழியே செயல்புரிகிறது. புரோட்டியஸ் இன்கிபிட்டார்ஸ் எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அதிக அளவிலான எக்ஸ்டஸியை உடலில் ஏற்படுத்தும். எக்ஸ்டஸி மற்றும் ரிட்டோனவீர் இடயே ஏற்படும் குறுக்கீடுகளால் ஒருவர் இறந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இண்டினவீரின் டிஹைட்ரேஷனால் சிறுநீரகத்தில் கல் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கும்.

GHB (Xyrem[R], “date rape drug”) இது பொதுவாக உடலிலிருந்து நுரையீரலால் (மூச்சு விடுவதின் மூலம்) வெளியேற்றப்படுகிறது. ஆயினும் புரோட்டியஸ் இன்கிபிட்டார்ஸ் GHB அளவை அதிகரிக்கக் கூடும். இது நான் நீயூக்ளியோசைடு ரிவர்ஸ் டிரான்ஸ்கிரிப்டேஸ் (டிலவிர்டின், நெவிரப்பின் மற்றும் எபவிரன்ஸ் இவை அறியாதது) உடன் குறுக்கீடு ஏற்படும்.

**கீட்டமைன்** (K,Special K)

இந்த மருந்து கல்லீரலால் முதலில் மெட்டொபாலிஸ்டு செய்யப்படுகிறது. இது ஏஆர்வி யுடன் குறுக்கீடு ஏற்பட்டதற்கான எந்த நோயாளியின் அறிக்கையும் அல்லது ஆராய்ச்சியும் இல்லை. ஆயினும் ரிடோனவீர், நெல்ப்பினவீர் மற்றும் எபவிரன்ஸ் அதிக அளவிலான கீட்டமைன்னை ஏற்படுத்த காரணமாகும்.
இது ஹெபடைடிஸ் ஏற்பட காரணமாகும்.

LSD

மெட்டோபாலிஸத்தினுடைய LSD இன்னும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஏஆர்வியுடனான குறுக்கீடு நிகழும் ஆனால் அது தெரியாது.

**மாரிஜுனா** (அத்தியாயம் 731ஐப் பார்)

ஏஆர்வி மற்றும் மாரிஜுனா இடையே குறுக்கீடுகள் பற்றி அறியவில்லை. படிப்பினைப்படி, புகைபிடிப்பதைவிட மாரிஜுனா உண்பதால் அதிகளவில் குறுக்கீடுகள் ஏற்படலாம்.

**அடிப்படை வரையறை:**

பல சிற்றின்ப போதை மருந்துகள் ஏஆர்வியுடன் குறுக்கீட்டை ஏற்படுத்தும். இந்த குறுக்கீடு பற்றிய விஷயங்களை முழுமையாக இல்லை மற்றும் கண்டறிவது கடினம். இந்த குறுக்கீடுகள் ஆபத்தானது அல்லது மரணத்தை ஏற்படுத்தும்.

**மேலும் தகவல்களுக்கு**

சிற்றின்ப போதைமருந்துகளுக்கும் மற்றும் ஏஆர்விக்கும் இடையேயான குறுக்கீடுகளுடைய ஏஜென்ட்ஸ் Tony Antoniou and Alice Lin-in Tseng, வெளியீடு Annals of pharmacotherapy 2002, பக்கங்கள் 1598 எ 1613.

Reviewed May 14, 2007